**Court of the District Munsif cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC . 63/2019** | | |
| **PW/DW/CW** | : | **PW1** | | |
| **Name** | : அன்னலெட்சுமி | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

( Accused absent u/s.317 CrPC petition filed and allowed)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of **15.04.2024**

---

**முதல் விசாரணை**:

நான் சம்சியாபுரத்தில் வசித்து வருகிறேன். எனக்கு அரசுத்தரப்பு சாட்சிகளை தெரியும். சாட்சி 2 தேவகுரு மற்றும் 3 வள்ளிநாயகம் ஆகியோர்கள் எனது ஊர்காரர்கள் ஆவார்கள். விபத்தில் இறந்துபோனது எனது கணவர் கந்தவேல் ஆவார். கடந்த 14.01.2019 ம் தேதி காலை 7.45 மணியளவில் பழனி பாதை யாத்திரைக்கு சென்றிருந்த எனது கணவருக்கு விபத்து ஏற்பட்டதாக எனக்கு சாட்சி வள்ளிநாயகம் போன் மூலம் தகவல் சொன்னதன் பேரில் நான் மதுரை, அரசு மருத்துவமனைக்கு சென்று எனது கணவரை பார்த்தேன். அவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. அவர் அன்றைய தினமே சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். நான் சாட்சி வள்ளிநாயகத்திடம் விசாரித்த போது எனது கணவரும் சாட்சிகள் தேவகுருவும், வள்ளி நாயகமும் பாதை யாத்திரைக்காக நடந்து சென்றபோது உசிலம்பட்டி சமத்துவபுரம் தண்ணீர் தொட்டி அருகே அவருக்கு பின்னால் வந்த அரசு பேருந்து அவர் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். நான் மதுரை அரசு மருத்துவமனையில் இருந்தபோது போலீசார் என்னிடம் புகாரை பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான். ( **அந்த புகார் வாக்குமூலம் அ.சா. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). அந்த புகார் வாக்குமூலத்தில் எனது கொழுந்தன் அழகு என்பவர் அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

அன்றைய தினம் காலை 7.45 மணியளவில் எனக்கு தகவல் கிடைத்தது. விபத்து நடந்த பின்பு எனது கணவரை அந்த அரசு பேருந்தின் ஒட்டுநர் மற்றும் நடத்துனர் சேர்ந்து சிகிச்சைக்காக அரசு மருத்துவமனையில் கொண்டு போய் சேர்த்தார்கள் என்றால் சரிதான். உசிலம்பட்டியிலிருந்து மதுரை அரசு மருத்துவமனைக்கு எனது கணவரை ஆம்புலன்ஸ்சில் கொண்டு சென்றபோது அவருடன் யார்யார் சென்றார்கள் என்றால் அவருடன் யாரும் செல்லவில்லை. நான் மதுரை அரசு மருத்துவமனை சென்றபோது மதியம் 12.00 மணி இருக்கும்.அப்போது எனது கணவர் பேசும் நிலையில் இல்லை. இழப்பீடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது கணவர் வீட்டில் இருந்து கிளம்பி பாதை யாத்திரை சென்ற 2 நாட்கள் கழித்து தான் விபத்து நடந்தது என்றால் ச ரிதான். எனது கணவர் பாதை யாத்திரை சென்றபோது ஏற்பட்ட அசதியால் தடுமாறி பேருந்தின் முன்பு விழுந்ததால் தான் விபத்து நடந்து என்றால் சரியல்ல. எனது கணவர் இறப்பிற்கு இழப்பீடு கிடைக்க வேண்டும் என்பதற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

S.d./Annalakshmi
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,Usilampatti.